**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 80/2021**

2024 ஆம் ஆண்டு மே மாதம் 27 ம் தேதி திங்கள் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ரவி | தொழில் | : |
| தந்தை பெயர் | : நாராயணசாமி | சமயம் | : |
| கிராமம் | : கப்லாம்பாடி | சாதி | : |
| வட்டம் | : . | வயது | : |

சாட்சியையும் எதிரியும் அவலூர்பேட்டை காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. ஆரோக்கியதாஸ் Gr.1 - 2692 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை:**

**1.** நான் தற்போது கடத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது.

2. கடந்த 2 வருடங்களுக்கு முன்பு நான் மலையனூர் கோவிலுக்கு சென்றிருந்தேன். அப்போது கூட்டத்தில் என்னுடைய கழுத்தில் இருந்த நகை அறுந்து இருந்தது. பிறகு சுற்றி பார்த்தேன். போலீசார் இருந்தார்கள். கழுத்தில் இருந்த நகை காணவில்லை என்று சொன்னேன். போலீசாரிடம் புகாரும் கொடுத்தேன். போலீசார் காணாமல் போன எனது நகையான 3 பவுன் கொடி, காசு, தாலி, குழல் என சேர்த்து 4 பவுன் நகைகளை போலீசார் கண்டுபிடித்து கொடுத்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகைகள் தான் அது. அந்த நகைகளை நீதிமன்றத்தில் இருந்து மனுதாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். ஆஜர் எதிரிகள் யார் என்று தெரியவில்லை. போலிசார் விசாரித்தார்கள்.

**(1. 02.03.2022 ந் தேதியிட்ட புகார் அ.சா.ஆ.1**

**2. நீதிமன்றத்தில் இருந்து நான் பெற்றுக்கொண்ட நகைகளை காட்டும் புகைப்படம் அ.சா.ஆ.2**

**3. சி.பி.நெ.312/2022 -ல் கண்ட ரூபாய் தாலி சரடு 3 பவுன், தங்க காசு எண்ணிக்கை 4 , மாங்கல்ய காசு-2, தங்க தாலியின் குண்டு எண்ணிக்கை -2 மொத்தம் சேர்த்து 4 பவுன் -**

**சான்று பொருள் -1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**அரசு தரப்பில் சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும், புகாரிலும் கடந்த 02.03.2022 ந் தேதி காலை 10.00 மணியவில் மேல்மலையனூர் கோவிலில் மாயாண கொள்ளை நடைபெறும் இடத்திற்கு சென்ற போது கழுத்தில் இருந்த நகைகளை 2 பெண்கள் அறுத்து சென்றார்கள் என்றும் பிறகு அந்த 2 பெண்களை பிடித்து அவர்களிடமிருந்து எனது நகைகளை வாங்கி கொடுத்தார்கள் என்றும் என் கழுத்தில் இருந்து நகைகளை அறுத்தவர்கள் ஆஜர் எதிரிகளான காளிம்மா, கவிதா என்பதை தெரிந்து கொண்டதாக போலிசார் விசாரரணையில் தெரிவித்து விட்டு தற்போது ஆஜர் எதிரிகளை தெரியவில்லை என்று உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை:**

ஆஜர் எதிரிகளை தெரியுமா என்றால் தெரியவில்லை. நான் கொடுத்த புகாரை யார் எழுதியது என்றால் போலீசார் எழுதினார்கள்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.